ஆத்ம ஜோதி



"வேலுந் திருக்கையு முண்டே
நமக்கொரு மெய்த்துணையே"



ஆத்மஜோதி.

ஓர் ஆத்மீகமாத வெளியீடு

எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே – சுத்தானந்தர்

சோதி 4 — கந்தனருள் ஆடிமீ 1 திகதி சுடர் 9

பொருளடக்கம்

முருக தத்துவம்	ஜாதகபாஸ்கரன்	225
முருகன் பிரார்த்தனைத்தமிழ்		226
அரியதத்துவம்	ஆசிரியர்	
உயிர்—யாகம் உதவாது	சுவாமிசித்பவானந்தர்	230
முருகன் அருள்வேட்டல்	திரு வி. க.	232
கதிர்காமயாத்திரை	கி. வா., ஜகந்நாதன்	233
மதமும்—விஞ்ஞானமும்	சு. மு. பிள்ளை	237
உத்தமமரணவன்		240
மரணக்குறிப்புகள்	ராமக்கிருஷ்ணர்	242
நான்கண்டகாட்சிகள்	ஸ்ரீசித்தானந்த சரஸ்வதி	245
பிரார்த்தனையும் பலனும்	சரணன்	251

ஆத்மஜோதி.

(ஓர் ஆத்மீகமாத வெளியீடு.)

ஆயுள் சந்தா ரூபா 75/- வருடசந்தா ரூபா 3/-

தனிப்பிரதி சதம் -/30

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி இலங்கை.

முருக தத்துவம்.

ஜாதகபாஸ்கரன்

ஒன்றே பிரம்ம முள்ள ததுவே
நின்றே யுயிர்தோறு நேத்திர முதலாம்
பொறியறு முகமாய்ப் பொருள்களே யேத்துஞ்
சேறிவுறு மாயையாஞ் சின்மயி லேறி
யறிவெனு மாற்ற லயில்வே லேந்தி
மறுவறு விருப்பு மாண்புறு செயலெனு
மிருமலை தம்மை யேமக்கெனப் புணர்ந்த
பெருமான் முருகன் பிறங்கிடு நாள்கோ
ளாய வுலக மனைத்தையும் பண்டைத்தனன்
ஏய வவற்றிருந் தியக்கியும் பலன்களை
யாவரு முணர வியற்றினன் சோதிடஞ்
சேவலன் றுணைத்தாட் சேர்ந்திடு வேனே

பொருள்:-- வேத சாஸ்திரங்கள் எல்லாவற்றினும் மூடிந்தபொருள் ஒன்றே: அந்த ஒருபொருள் பிரம்மம் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தப்பிரம்மமே உண்மையாகஇருக்கின்றபொருள். கண், காது, நாக்கு, மூக்கு, மெய், மனமென்னும் ஆறு இந்திரியங்களின் வாயிலாய் எல்லாப் பொருட்களும் அடர்த்தியாய்த்தன்னிடத்தில் பொருந்தியுள்ள குகமாகையாகிய மயிலை வாகனமாகக் கொண்டு, ஞானசக்தியாகிய கூரிய வேலினைத் தாங்கியும், இச்சையும் கிரியையும் ஆகிய இரண்டு சக்திகளாகிய வள்ளி தெய்வயானை என்னும் இரண்டுமனைவிமார்களை என்போன்ற சிவன்களுய்யும்பொருட்டாகவே மணந்த, பெருமை பொருந்திய தலைவன் நாதன் சச்சிதானந்த வடிவப்பிரம்மம். அண்டங்களெல்லாவற்றையும் சிருஷ்டித்தனர். தன்னிடத்திலேயே பொருந்தியுள்ள நட்சத்திரங்கள் கிரகங்கள் ஆகியவைகட்கு உள்சேர்ந்தும் இருந்துகொண்டு அவற்றைச்சஞ்சரிக்கும்படி செய்தும், பூர்வபுண்ணியபாப பலன்களை மக்கள் யாவரும் உணர்ந்துய்வான் வேண்டி சோதிட நூலையும் முருகப்பெருமானே அருளிச்செய்தனர்: நாதமென்னும் சேவற் கொடியையுடைய முருகனதுதுணையாகவுள்ள பாதத்தை அடைந்திடுவேன்.

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்.

உருகா மனமுஞ் சிவஞான
முணரா வறிவு முனதுபுக
ழோதா நாவு மோதக்கேட்
டுவந்தே யினிய நதிபோலப்
பெருகா விழியு முடையேனைப்
பிறவிக் கடலில் வீழாமற்
பேணி யெடுத்திங் கெனதுள்ளம்
பிரியா விரிஞ்சைப் பதிவாழு
முருகா வருக சதுர்வேத
முதல்வா வருக வினைதீர்க்கு
முனிவா வருக மலராறு
முகவா வருக திருமாலின்
மருகா வருக மயிலேறு
மன்னு வருக வடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே,

வாழ்த்து.

துய்யதோர் மறைக ளாறுந் துதித்திடற்
கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும்
மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை
வாழ்க வன்னன்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கவிப்
புவன மெல்லாம்.

எரியோம்புதலின் அரியதத்துவம்.

ஆசிரியர்

இறைவனடி சேரும் பொருட்டு இயற்கையோடிசைந்த வாழ்வு நடாத்திய நம் ஆன்றோர்கள் நாம் அனுட்டிக்க வேண்டிய நித்தியசடங்குகளில் அவ்வாழ்வை மிகவும் நட்பாக இணைத்தனர். மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய எட்டும் அட்டமூர்த்தமெனப் பட்டு, இறைவரது திருமேனிகளாம். அவற்றுள் எரி சிறந்தது. ஏனெனில், மண்ணும் நீரும் தாழ்ந்தவை; சூரியனிலும் சந்திரனிலும் இறைவரது உருவம் உளளுறையாய் நிலவுவதன்றி வெளிப்படத்தெரிவதில்லை; எரியிலேதிறப்புறக்காணப்படும். இத்திருமேனியினுள்ளே இறைவர்பாலில் நெய்போல் நிற்பர். "அங்கியாவார் விடையுயர்த்தவரே" என்ற சேக்கிழார்வாக்கை நோக்குக. இக்காரணம்பற்றியே நம் முன்னோர் தீயை முதன்மையாக உபாசித்தனர்; வீடுகளில் நித்திய முத்தீவளர்த்தனர்; அக்கினி ஹோத்ர வைதீகச் சடங்குகளை உயிர்க்கடமையாகக்கருதினர்; ஔபாசனத்தீயை அணைக்காமல் பரம்பரையாகக் காப்பாற்றியும் வந்தனர்.

தீ-வளர்த்தலின் பொருளென்ன? கதிரொளித்தீயே கடல் நீரை மேகமாக்கிமழைதருகின்றது. "நானே உயிருடலில் தீயாயிருந்து உணவைச் செரிக்கச் செய்கிறேன்" என்கிறார் பகவான் கீதையில். கனலின்றி உணவில்லை, உடலில்லை உயிரில்லை, வாழ்வில்லை. கனல் ஒருசக்தி, கனல் கடவுள் வடிவம். இறைவனை "விறகில்தீயினன்" "மாமணிச்சோதியான்" என்றார் அப்பர்.

கனல் இரண்டுவகையாகப் பிரணமித்துள்ளது. ஒன்று தூலக்கனல்; விறகெரிக்கும்போதும்: விளக்கெரிக்கும்போதும், கதிர் பரவும்போதும், கல்லுடைக்கும்போதும், சாணைபிடிக்கும்போதும், அரணிகடையும்போதும் தள்ளியெழுவது தூலக்கனலாகும். அதுவே நம்புலன்களுக்கு உணர்வாவது. மற்றொரு சூக்குமக்கனல் நம்முள்ளே உளது. அதுவே குண்டலிக்கனல், மூலாதாரக்கனல், சிற்கனல், சக்திக்கனல், தவக்கனல் என்று பல

வாகப்பெயர்பெற்று யோகிகளுக்கு உணர்வாவது. அக்கனலே அனைத்தையும் ஆக்கிக்காக்கிறது. அக்கனலை எழுப்பி மேருதண்டத்தின்மேலேற்றி, பிரமாந்திரத்தில்மூட்டச்செய்தால், பரமானந்தமுண்டாகும்; நம்மிடம் மறைந்துள்ள தெய்வசக்திகளெல்லாம் கட்டவிழ்ந்து விளங்கும்; அருட்சோதிவிளக்கமாகும்.

மூலக்கனலே, ஆதாரசக்கரங்களூடு சகஸ்ராரத்தை எட்டமேலேற்றலே தீவளர்த்தலின் தத்துவப் பொருளாகும். இந்த மூலத்தீயைப்பரசான்மாவை மாசறுத்துச் சுத்தான்மாவாக்கி, ஈசனுடன் கூட்டுவிக்கும் சக்தியாகும். இக்கனலே ஜாதவேத்ஸ (பிறப்புகளறிவான்), அக்நாத்துமறிவான், சக்தியளிப்பவன், வரமளிப்பவன், அனுகமப்பான், தேசளிப்பான் என்றுபலவாறு வேதம் புகழும், ஆற்றல், வலிமை, ஒளி, ஆயுள், வீரம், தீரம், அறிவு திட்பம், வினைவெற்றி, வாழ்வின்பம் எல்லாம் இத்தெய்வக் கனலேமிய தூலமாகத்தோன்றும் கனல்மூலம் உபாசிக்க நம்பெரியார்கள் சமிதானம், அக்கினி ஹோத்ரம், ஔபாசனம் முதலிய புண்ணியக்கிரியைகளை ஏற்படுத்தினர்.

தீ வளர்க்காமல் எச்சடங்கும் நிறைவேறாது. சமித்துத் தீ வளர்த்தே பிரமசாரி கல்விபயில்கிறான். தீயின் முன்னிலையிலே யே காதலர்மணமொன்றி இல்லறம்பூண்பர். பதின்மூன்று நூற்றாண்டுகட்கு முன்தமிழ்நாட்டிலிருந்த முறையை பெரியபுராணத்தில் காணலாம்,

"மறையோலி பொங்கி ஓங்க,
மங்கல வாழ்த்து மல்க
நிறைவளைச் சேங்கைபற்ற
நேரிழையவர் முனந்தப்
பொறையணி முந்நூன் மார்பர்
புகரில்வண் பொரிகையாட்டி
இறைவனை யேத்தும்வேளை
யெரிவலங் கொண்டவேண்டி"

என்கிறார் சேக்கிழார், திருநல்லூர்ப்பெருமணத்தை விபரிக்கும்இடத்தில், இங்கே திருநீலநக்கநாயனார், நெற் பொரியை வேள்வித்தீயில் ஆகுதியாகப்பெய்து இறைவழிபாடு செய்யும் போது சம்பந்தப்பெருமான் அம்மையாரின் கைப்பிடித்து எரியை

வலம்வருவது விளக்கப்பட்டுள்ளது. வேள்விச் சடங்கின்முன் மணமகனின் வலப்பக்கத்திருக்கும் பெண் அச்சடங்குமுடிந்தபின் எரிவலம் வந்து இடப்பாகத்தைச்சாரும் வழக்கத்தில் அரியதத்துவம் அடங்கியுள்ளது. உரியமணமகனைப்பெற அவள்செய்யும் நோன்பும் தவமும் மணவேள்வியில் அமைந்துள்ளது. அமுதத்துக்கு மேலான ஆகுதிக்குச்சிறந்த சாதனம் பொரியென்பதும் இங்கே தரப்பட்டுள்ளது, உடலுக்கும் உயிருக்கும் இதமானவேறு பல சடங்குகளும் தீவளர்த்தலுடன் தொடர்புடைத்து. இறுதியில் தீச்சட்டியுடனேதான் மனிதவுடல்சென்று, தீயில் வெந்து பிடிசாம்பலாகிறது. வேதரிஷிகள் உயிரைப்போலத் தீயைப்பேணினர்.

தீவளர்த்தலின் தத்துவப்பொருள் ஒருபுறமிருக்க, அதனால் உடலுக்கும் மனத்திற்கும் ஓர் இன்பமுண்டாகின்றது. சமித்துப்புகை நோய்க்கிருமிகளை அழிக்கும் சமிதாக்கினி உடலுக்கு சுகமான விறுவிறுப்பைத்தரும். இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்தும், தேஜஸ் அளிக்கும். சமிதாக்கினி வளர்ப்பவர் முகத்தில் ஒருபொலிவைக் காணலாம். அந்தமந்திரக்கனல்போயிற்று; தீயைநாம் அலட்சியம்செய்தோம்; சமித்துப்புகை நமது இல்லங்களை இன்றுபுனிதப்படுத்தவில்லை. எங்குபார்த்தாலும் பிரமபத்திரப்புகையின் சுழற்சியையே காண்கின்றோம்; அதின் நாற்றத்தையே சுவாசிக்கின்றோம். அருட்புகையின் இடத்தை சுருட்டுப்புகை கைப்பற்றிமக்கள் உடல்நலம் பாழாய்விட்டது. இக்காலம் "சமிதாக்கினி வளருங்கள்" என்றால் நகைப்புக்கிடமாகலாம் ஆனால், வான்முகில் தவறுதலைப்பெய்து, நாட்டில் வளங்கள்பொங்கி மக்கள்குறைவிலாது இன்புற்றுவாழவேண்டுமெனின், நான்மறையறங்கள் ஓங்கலேவேண்டும். நற்றவமும், வேள்வியும் மல்கலேவேண்டும்.

அத்தன்மையும் தீவேட்டலும் சாதிமத வேறுபாடில்லாமல் அனைவர்க்கும் இயலும். அரசாங்கச்சியால் தீமூட்டி, அவரவர் தாய்மொழியில் உள்ள புண்ணியவாக்குகளைச் சொல்லி, அல்லதுமான சீகமாக இறைவனை எண்ணி, தீயதுகெட்டு, நல்லதுதழைக்கத் தீவளர்க்கலாம். தேவாரதிருவாசகங்களை ஓதியும் தீவளர்க்கலாம். வேதசாரமாகச்சென்ற இதழில் வெளிவந்த பாடல்களை அன்பர்கள் பலர்கூடி தீயைச்சுற்றியமர்ந்து மனமொருமித்துப் பாடிவழிபடுதலால் விசேடபலன் கிடைக்கும், தழிழில் தீயுடன் பேசி வெண்மையான நெற்பொரியை ஆகுதியாக வழங்குதலே

உயிர் வதையுடன் கூடிய யாகம் உதவாது.

(சுவாமி சித்பவானந்தர்)

வேதத்தில் அடங்கியிருக்கின்ற அனைத்துமே மேலானவை கள் என்று எண்ணிவிடலாகாது. இயற்கையில் மேலான பாங் குகளும் உண்டு. கீழான பாங்குகளும் உண்டு. அதேபிகாரம் வேதத்திலும் மேலான பாங்குகளையும் கீழான பாங்குகளையும் காணலாம்.

ஞானகாண்டம் என்னும் பகுதியிலேதத்தினின்று பிரித்தெடுக் கப்பட்டதாகும். வேதாந்தம் என்னும்பெயர்பெற்று என்றென் றும் அழிவற்றநிலையிலேயாண்டும் இருந்துவருகிறது. எச்சமூக கத்தாராலும் எக்காலத்திலும் ஞானகாண்டத்தின்மீது குறை காணமுடியாது. கல்லோர்க்குற்ற அருள் விருந்தென்று ஞான காண்டத்தைப்பகரவேண்டும்.

கருமகாண்டமென்னும் பகுதியில் சிறப்பும்சீர்கேடும் கலந்து கிடக்கின்றன. சீர்கேடுகளை ஒழித்து விடுவதற்கேற்ற மதஆசாரி யர்கள் அப்போதைக்கப்போது தோன்றிவந்திருக்கின்றனர். யாக மென்னும்வைதிககர்மத்தின் உயர்ந்த பகுதியானதுதான், தனது என்பவற்றை தியாகம்செய்வதற்கு அமைந்ததாம். சான்றோன்று

மூற்பக்கத்தொடர்

காலத்திற்குப்பொருத்தமான முறையுமாகும். அவரவர் இஷ்ட மூர்த்தியின் திருநாமத்தைச்சொல்லியும் வழிபடலாம். தீயோம் பல், உடல், உயிர், மனம் அனைத்திற்கும் நலமாகும். அதுநமக்கு களுக்குப்புதிய சக்தியைத்தரும் என்பது பலர் அனுபவத்திற்க ண்ட உண்மையாகும்.

"ஏண் சுடராகை உலப்பிலி நாதனை
ஏண் சுடராகி என் உள்ளத்திருக் கின்ற
கண் சுடரோன் உலகேழும் கடந்த அத்
தண்சுடர் ஒமத்தலைவனும்ஆமே" -திருமூலர்

[யோகி சுத்தானந்த பாரதியார் தந்த விளக்கத்தைத் தழுவியவை யப்பட்டது]

எடுத்துக்கொள்வோம். விச்வஜித் யக்ஞம் என்பது ஓர் ஒப்பற்ற யக்ஞமாகும். அதைச்செய்வதனை செய்து முடிப்பவனுக்கு விச்வ மனைத்தும் சொந்தமாய்விடுகிறது. அதற்குமுதல் நிபந்தனை அத் தகையயாகம் செய்கின்ற யஜமானன் தான், தனது என்பனவற் றையெல்லாம் பிறர்பொருட்டு மனமுவந்து எடுத்துவழங்கி விட வேண்டும். அத்தகைய யாகத்தில் அடங்கியுள்ளமேலாம் கோட் பாடுவிலேகளுக்கு நன்குவிளங்குகிறது.

சுயநலக்காரர்களுக் கென்றமைந்த யாகங்கள் உண்டு. சுக போகங்களை விரும்புகின்றவர்களுக் கென்றமைந்த யாகங்கள் உண்டு. பிறர்க்குத்தீங்கு செய்வதற்கென்று அமைந்துள்ளயாகங் கள் உண்டு. மற்றஉயிர்களைவதைசெய்து அதன் பயனுகதான் நலன் அடையவேண்டுமென்று செய்யப்படும்யாகம் உண்டு. அவ ரவர்மனநிலைக்கு ஏற்ப செய்யப்படும்யாகம் மேலானது அல் லது கீழானது ஆகிறது.

இன்றைக்கு தேவாராதனையாக வடிமெடுத்திருப்பது வேத காலத்தில் யாகமென்னும் பெயர்பெற்றிருந்தது. தேவாராதனை யில் வனதேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுத்து வணங்கும் அசு ரவழிபாடுமுதல் நிர்குணபிரம்ம உபாசனைசெய்யும் பாரமார்த்திக பெருநிலை பரியந்தம் விதவிதமான படித்தரங்கள் உண்டு. அவர வர் மனபரிபாகத்துக்கு இத்தனைவித ஆராதனைகளை சான்றோ கும் உயிர்ப்பலிகொடுத்து தெய்வத்தை வணங்குகின்றவர்கள் எல்லாரும் பிழைத்தாமாள மக்களே. சங்கிலிகருப்பனுக்கு கிடா வெட்டுபவரும் வேதநெறிப்படி அஜமேதயக்ஞம் செய்பவரும் பான்மையில் ஒரேவிதமக்களே.

காட்டுமிராண்டிக் தனத்துக்கு நிகராயிருந்த உயிர்வதை செய்யும் யாகங்களை அறவே ஒழிக்க புத்தர் பெருமான் தோன்றி னர். வெற்றிகரமான அவருடைய பெருமுயற்சிக்குப் பிறகு நாட்டில் அத்தகைய யாகங்களெல்லாம் எடுபட்டுப் போய்விட் டன. பின்பு அத்தகையகர்ம காண்டத்தின் புன்மைகளை மேலு ம்வேரறக்கவோய சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலாயினோர் தோன்றினர். இம் மூன்று ஆசாரியர்கள் காட்டியுள்ள தெள்ளிய வேதாந்த நெறிகளை பின்பற்றுபவர்களே உண்மையான அந்த ணர் ஆகின்றனர். அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ்வுயி

முருகன் அருள் வேட்டல்.

[திரு வி. கலியாணசுந்தரமுதலியார்]

1 கலியுகத்துங் கண்கண்ட கற்பகமே
கருத்தினிக்குங் கரும்பே! தேனே!
வலியிழந்து பினியடைந்தேன் மலரடியே
துணையென்று மருந்து கண்டேன்
நலிவழித்துப் பொன்னுடலம் நல்கியருள்
நாயகனே! ஞான நாதா!
கலிகடலில் மலரிலங்கைக் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

2 விழியில்லார் விழிபெற்றார் செவியில்லார்
செவிபெற்றார் விளம்பும் வாயில்
மொழியில்லார் மொழிபெற்றார் முருகனினை
தருளாலே மூடனாயேன்
வழியில்லா வழிநின்று வளர்த்தவினை
வேரறுப்பாய் வரதா! மூங்கில்
கழியில்லார் களியாடுங் கதிரைவேற்
பெருமானே! கருணைத்தேவே.

மூற்பக்கத்தொடர்

ர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான், என்னும்மறை மொழியை இலக்காகவைத்துக்கொண்டே அந்தணர்யார் என்று நாம் ஆராயவேண்டும். பொன்ஏன்றுபெயர் படைத்திருப்பதெல்லாம் பொன்ஆகாது. அந்தணர்என்று தம்மை அழைத்துக்கொள்பவர்கள் எல்லாம் அந்தணர்ஆகார். பனபரியாகத்தையும் அதற்கேற்ற சீரிய செயலையுடன கொண்டே அந்தணர் யார்என்று நிர்ணயிக்கவேண்டும்.

தர்மத்தை உள்ளபடி நிலைநாட்டுதற்கோ, அல்லது யாகம் செய்பவர்களை எத்துறையிலாவது மேலோங்கச் செய்வதற்கோ உயிர்வதையும் கூடியயாகம் உதவாது.

கதிர்காமயாத்திரை.

(கி. வா. ஜகந்நாதன்)

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தோடங்கினர்க்கு
வார்த்தை சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமான சுவாமிகள் பாடினார். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் சிறப்பாக எல்லா இடங்களிலும் அமைவதில்லை. தலந்தோறும் தீர்த்தங்கள் இருந்தாலும் அவைஒருவருக்கு ஒடாகா. ஆற்றுநீர் எப்போதும் புதியது; ஓட்டம்உடையது; ஆறுக்கேற்றவது. சோழநாட்டில் உள்ள திருத்தலங்களில் பெரும்பாலானவை காவிரியின் அழகிய கரையிலே அமைந்திருக்கின்றன.

கதிர்காமத்திலும் இத்தகைய சிறப்பு உண்டு. அங்கேஉள்ள ஆறு சாமான்ய ஆறு அல்ல; கங்கை, வேறும்கங்கை கூட அல்ல மாணிக்ககங்கை. பெயரைக்கேட்டாலே மனசுக்கு இன்பம் உண்டாகிறது. "மணிதாளம் வீசி யணியருவி சூழ்பு மருவுகதிர்காமப் பெருமாளே" என்ற அருணகிரிநாதர் பாட்டைக் கேட்டும் பாடியும் வந்தானைக்கு அப்பெருமான் கூறும் மணிதாளம் வீசும் அணியருவி இன்னதென்று அப்போது புலப்பட்டது. மாணிக்ககங்கையைத்தான் அருணகிரியார் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

மாணிக்ககங்கையின் கரையிலேயின்றேரும், ஆறு அதிக அகலம் இல்லை. ஐம்பது அறுபது அடி அகலம்தான் இருக்கும்; அப்படி பாழுது அதிக வெள்ளமும் இல்லை, ஒன்றரையடி நீரோ ஓடிக்கொண்டிருந்தது. சிறிதும் அச்சமின்றி இறங்கி உட்கார்ந்தபடியே, மேலே தண்ணீரை வாரி இறைத்துக்கொள்ளலாம். தெளிந்தநீர் ஓடுகின்ற ஆற்றில் குளிப்பதே ஓர் ஆனந்தம் நீராடினேன், அங்கே ஒருமரம் கிடந்தது. வேறுகல் இல்லை. காவிரிஆற்றில் நீராடிய பழக்கம் அங்குவந்துவிட்டது. அந்தமரத்தையே கல்லாகக்கொண்டு ஆடையைத் துவைத்தேன், நெடுந்தூரம் பிரயாணம் செய்ததினால் உடம்பிலே அலுப்பு இருந்தது.

நம்முடைய உடம்பைக்கண்டு நாமே அருவருக்கும் நிலைகூட சில பிராயாணங்களில் வந்துவிடுகிறது அல்லவா? இந்த அலுப்பும்அழுக்கும் மாணிக்க கங்கையின் தூய நீரில் மூழ்கியவுடன் ஓடிப்போய்விட்டன: உடம்பிலே மாத்திரம் குளிர்ச்சி உண்டாயிற்று. கதிர்காமப்பெருமானே தரிசிக்கப்போகின்றோம் என்றநினைவும் அந்த நினைவிலே எழும் இன்ப உணர்ச்சியும் என் உள்ளத்தை ஆட்கொண்டன. பலமைலதூரத்திலுள்ள தமிழ் நாட்டில் சதா சட சட சத்தமும் கடகடமுழக்கமும் உள்ள சென்னையில் உள்ளவன் என்றநினைவே அப்பொழுது அகன்றுவிட்டது. ஏதோ இன்ப உலகத்துக்குப்போகச் சித்தமாக இருக்கிறவன் எப்படி மற்றவற்றையெல்லாம மறந்து அதையே நினைந்து நிற்பானோ அப்படித்தான் நான் இருந்தேன்.

நாங்கள்போனபோதுவெள்ளம் இல்லை. சிலர் ஆற்றில்இறங்கிச் சென்றார்கள்: சிலர் பாலத்தின்வழியே சென்றார்கள். அதுஆடி இறதே அதைப்பார்ப்பதற்காக அதன் வழியே செல்பவர்களோ பலர்.

வாழ்க்கையென்னும் ஆற்றைக் கடப்பவர்களிலும் இப்படி இரண்டுவகையினர் இருக்கின்றார்கள். வாழ்க்கையின் இன்பதுன்பங்களில் நனைந்து அதனைக்கடப்பவர்கள் பலர். வாழ்க்கையில் பக்தியென்ற பாலமிட்டு ஆடிப்பாடி, இன்பதுன்பங்கள் உள்ளத்தில் ஒட்டாமல், ஆனந்தமாகக்கடப்பவர்கள் சிலர். வெள்ளம்வந்துவிட்டால் பின்னவர்களுடைய ஆனந்தத்துக்குக் குறைவராது. வாழ்க்கையிலேயே இறங்கினவர்கள் பாவம் சில சமயம மூழ்கியே போய்விடுகிறார்கள்.

கதிர்காமத்தில் சந்நிதி வீதிக்கு வந்திருக்கிறோம் என்ற நினைவிலே இன்பம் உண்டாயிற்று. எல்லா வசதிகளும் அமைய, வேகமானகாரில்வந்த எங்களுக்கே இந்த உணர்ச்சி ஏற்பட்டால், பலகாலமாகக் கதிர்காமதரிசனம் செய்யவேண்டுமென்று எண்ணி எண்ணி முயன்று, வேண்டிய வசதிகளைச்செய்துகொண்டு காலால் நடந்துவரும் அன்பர்களுக்கு உண்டாகும் அனுபவத்தை என்ன வென்று சொல்வது! பசிக்கப்பசிக்க உலைவுக்கு ருசி அதிகமாகிறது. காட்டைக்காட்டைப் பிறக்கும் குழந்தையின் அருமை மிகுதியாகிறது. பலகாள் பிரிந்து, காணவில்லையே என்ற ஏக்கம் மிக

மிகப் பின்னுலே அமையும் கூட்டுறவிலே ஆனந்தம் எல்லையற்றதாகிறது. அப்படியே இறைவன் எழுந்தருளியிருக்கும் தலம் எவ்வளவு அடையஅரியதாக இருக்கிறதோ, அவ்வளவு அதன்பால் மதிப்பும், தரிசனத்தின்போது உணர்ச்சியும் மிகுதியாகின்றன. மலைமேலே கோயில்களைக்கட்டிப் பிரார்த்தனை செலுத்த அங்கே போக வைத்த பெரியயோர்கள், மனிதனுடைய மன இயல்பை எவ்வளவு துட்பமாக உணர்ந்திருக்கிறார்கள். வருத்தமின்றிக் கிடைக்கும், பொருளில் மனிதனுக்கு அருமைப்பாடு பிறப்பதில்லை.

கடல் கடந்து நாடு கடந்து காடுகடந்து கதிர்காமவேலனைத் தரிசிக்க வந்த பழங்கால அன்பர்களுக்கு நிச்சயமாக அதிசயமான இன்ப உணர்ச்சி ஏற்பட்டுத்தான் இருக்கும். மனசிலே அன்பு முதிர்ந்தவர்களுக்கு ஆண்டவனை எங்கே கண்டாலும் செஞ்சுகெகிழும். அத்தகையவர்களுக்கு எல்லாப் பொருளிலும் இறைவனைக்கண்டு உருகும் ஆற்றல் இருக்கும். ஞானத்தகல்லாகிய நெஞ்சையுடையவர்களுக்கு அந்தக்கல் நெகிழ்ந்து கசிந்து கரைந்து உருகவேண்டுமே! அதற்காகத்தான் இப்படியெல்லாம் அலைந்து திரிந்து தேடிக்கண்டு பிடித்தால், தலங்களிடம் மதிப்பு ஏற்படுமென்று ஆன்றோர்கள் கருதியிருக்கவேண்டும்.

சந்நிதிவீதி தென்வடலாக இருக்கிறது. வடக்குக்கோயில் முருகனுடைய திருக்கோயிலாயும், தெற்குக்கோயில் வள்ளியம்மையார் கோயிலாயும் உள்ளன. முருகன் சந்நிதி தென்முகம் நோக்கியிருப்பது மரபு. சனகாதிமுனிவர்களுக்கு ஒப்பரிய மோனத்தைச் சின்முத்திரையினால் சொல்லாமற் சொன்ன தக்ஷிணமூர்த்தி தென்முகம் நோக்கி எழுந்தருளியிருக்கிறார். தம்முடைய தூக்கிய திருவடியால் அனுக்கிரகத்தை காட்டுவதோடு தென்திசைத்தலைவனுகிய யமனை இன்றும்ஓட்டுவேன் என்னும்குறிப்பை அருளும் நடராஜப்பெருமானும் தென்திசைநோக்கி ஆடுகிறான்.

உலகில் உள்ள மக்கள் பலபலதிசைகளிலே பிரயாணம்செய்கிறார்கள். அந்தப்பிரயாணத்துக்குரிய வாகனங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. உண்மையில் அவர்கள்தென் திசையைநோக்கியே ஒவ்வொரு நாளும் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காலனுடைய கைப்படுவதற்காகவே தென்திசையை நோக்கிச்செல்கிறார்கள். ஒரு மனிதனுடைய ஆயுள் எண்பது என்றுவைத்துக்கொள்வோம். அவன் அறுபது ஆண்டுகள் வாழ்கிறான். இன்னும் இருபதாண்டு தாம் அவன் பிரயாணம் இருக்கிறதென்று நாம் கணக்குப்பண்ணவேண்டும். இந்தஉலகில் வாழும் ஒவ்வொருநாளும் நம்மைக் காலனுடைய கைப்பிடியில்அகப்படும்படியாக உந்துகிறது. காலனூருக்குப் போகும் ஒவ்வோராண்டும் ஒவ்வோரடி முன்னேறிக்கொண்டே இருக்கிறோம்.

"நாள் என ஒன்றுபோற்காட்டி உயிர்களும்
வாளது உணர்வார்ப்பெறின்"

என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஒவ்வொரு நாளும் நம் வாழ்வைக்குறித்து காலனூருக்கும் நமக்கும்உள்ள தூரத்தையும் குறைக்கின்றது பிரபஞ்சவாழ்க்கைப்பிரயாணத்தில் நம்முடைய நடை தென்முகம்நோக்கி இருக்கின்றது. தெற்குப்பட்டினத்துக்குப்போக விரைந்து கொண்டிருக்கிறோம்.

"சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே"
என்று மணிவாசகர் கூறுகிறார்.

தென்திசையில் இருந்து கொண்டு, எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் நம்மைப் பாசத்தில் வந்துதானே விழவேண்டும் என்று யமன் நினைத்து இறுமாந்து கொண்டிருக்கிறான். நாமும் அவன் இறுமாப்பை அதிகமாக்க அவனூரை நோக்கி நடைபோடுகிறோம்.

இதற்கு மேல் எதிரானதிக்கில் ஆண்டவன் அமர்ந்து எச்சரிக்கை செய்கிறான். கோயில் காட்டி, கோபுரம் காட்டி, மலைகாட்டி, மரஞ்செடிகாட்டி, "வடக்கே திரும்பு அப்பா" என்று குறிப்பிடுகிறான். "என்னைத்தரிசிக்க வேண்டுமென்று நீ எப்போது நினைந்து முதலடிவைக்கிறாயோ, அப்போதே நீ பிழைத்துப்போனாய் என் சக்தி நின் மேல்வினைக்கும் ஒவ்வோரடியும் உன்னைத்தெற்குத் திசை தலைவனிடமிருந்து விலகி நிற்கச்செய்கிறது. வா, இக்கோவா, வடக்கு நோக்கிவா" என்று குமர குருபரனுடைய ஞானசக்திதான் அழைக்கிறது. தெற்கே போய்க்கொண்டிருக்கிற நாம் சற்றே

மதமும்-விஞ்ஞானமும்.

(தென்னபிரிக்கா டர்பன் ச. மு. பிள்ளை அவர்கள்)

மதத்தையும் விஞ்ஞானத்தையும் சண்டைக்கு விட்டு முட்ட விடக்கூடாது மதம் ஒருவிஷயத்தைக் குறித்து போதிக்கிறது. விஞ்ஞானம் மற்றொரு விஷயத்தைக்குறித்து போதிக்கிறது.

மதங்கள் அனைத்தும் மெய் அல்லவென்னும் ஆட்சேபனை முதன்மையாக விஞ்ஞானத் துறையினின்றுதான் கிழம்புகிறது. இதற்குக்காரணம் என்ன? விஞ்ஞான ஆராய்ச்சிகள் கண்களினால் பிரத்தியக்ஷமாகப் பார்க்கக்கூடியதை ஆதாரமாகக் கொண்டவை கண் திருஷ்டிக்கு எட்டாதவைகள் விஞ்ஞான ரீதியில்மெய்யல்ல. ஆராய்ச்சி ஸ்தலத்தில் வேலை செய்யும் விஞ்ஞானி கடவுள் என்னும்பொருளைக் காணமுடிவதில்லை. அந்த விஞ்ஞானி தன்னிடமுள்ள தூரதிருஷ்டி கண்ணுடியைக் கொண்டு வான வீதிகளையெல்லாம் பார்த்துவிடுகிறான். அணுவைத்துருவி அதனுள் உள ரகசியங்களையும் அறிந்துவிடுகிறான். இம்மாதிரியான ஆராய்ச்சியாலேயே எங்கும் கடவுள் என்னும் பொருள் இருக்கக் கூடுமென்று எண்ணுவதற்கு ஏதுவான சான்றுகளையும் பார்ப்பதில்லை. ஆகவே அவன் நாஸ்திகமாகவும், நிடரும்பிக்கையுடனும்கடவுள்எங்குமில்லையென்று விளம்புகிறான்.

முற்பக்கத்தொடர்ச்சி

திரும்பிப் பார்த்தால் போதும். நேர் எதிரே தென் திசையின் மேல் திருவிழிப்பார்வையைச்செலுத்தி அஞ்சலென்ற கரதலத்தையும், ஆள்வேனென்னும் திருவடியையும் காட்டிக்கொண்டு முருகன் வீற்றிருக்கிறான். அவன் திருக்கோவிலுக்குச் செல்லும் போதே நம்முடைய பயணம் மாறுகிறது. தென்திசைக்கு எதிரானயாத்திரையாக மாறுகிறது: "சாமாறு" விரைந்து கொண்டிருந்ததுபோய் "சாமாறு" விரையும்முயற்சி ஆரம்பமாகிறது.

['அமிர்தவசனி' யில் வெளிவந்த கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டது]

விஞ்ஞானிகள் கூறும் இந்த வார்த்தைகளை பலர் வேதவாக்காக நம்பவும் செய்துவிடுகிறார்கள். மக்களுக்கு விஞ்ஞானசாஸ்திரத்தில் அவ்வளவு பக்தியும் பிறந்திருக்கிறது. விஞ்ஞானி சொல்லிவிட்டார்; அதில்பொய் இருக்காது என்பது அவர்களுடை நம்பிக்கை.

ஆனால் விஞ்ஞானிகளும் மானிடர்கள்தானே! பிழை செய்வது மானிடஜன்மத்துக்கு இயல்புதானே! விஞ்ஞானி பிழை செய்ய மாட்டானென்று இவ்வளவு தூரம் அவர்கள் சிந்திப்பதில்லை, ஜனங்களில் பெரும்பான்மையோர் விஞ்ஞான சரித்திரத்தைக்குறித்து ஆராய்ச்சி செய்து பார்ப்பதில்லை. ஒரு காலத்தில் மெய்யென்று கருதப்படும் விஞ்ஞான உண்மைகள் மற்றொருகாலத்தில் பொய்யாகி விட்டிருப்பதை அவர்கள் ஊன்றிப் பார்ப்பதில்லை.

கணித சாஸ்திரியான யூக்ளிட் கண்டுபிடித்த விஞ்ஞான சரித்திரசாஸ்திர உண்மைகள் இந்த உலகத்தில் இரண்டாயிரமருஷகாலம் கட்டிப்போகுமளவில்லாமல் உண்மையாகவிளங்கி வந்தன. இன்று யூக்ளிட்கண்டுபிடித்த உண்மைகளைவிட இன்னும் பல விஷயங்களும் உண்டென்பது தெரிந்துவிட்டது. அதுபோலவே நியூடன பூமியின் ஆகர்ஷணசக்தியைக்கண்டு பிடித்துச்சொன்னார். அவர் சொன்ன சக்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இதுவரையும் ஆராய்ச்சிகள் பலநடந்தன அவர் சொன்னசக்தியையே முழு உண்மையாகக் கொண்டு ஆராய்ச்சிகள் நடந்தன. ஆனால் இன்று நியூடன் சொன்னவை முழு உண்மைகளல்லவென்று கண்டுபிடித்துவிட்டார்கள்.

விஞ்ஞானிகளிடையே ஒரு கல்லதுணம் இருக்கிறது. கல்லதொரு சமயோசாயத்தை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள், ஒருவிஞ்ஞானி அவர் எவ்வளவு மேதாவியாக இருப்பினும் சரி அவர் ஆராய்ச்சிசெய்துகண்டுபிடித்த ஒரு விஷயத்தை முற்றும் உண்மையென்று மற்ற விஞ்ஞானிகள் நம்பிவிடுவதில்லை. விஞ்ஞானத்துறையில் ஆராய்ச்சிக்குமேல் ஆராய்ச்சிகள் நடந்தவாறு இருக்கும். ஆட்சேபணைக்குமேல் ஆட்சேபணைகள் கிளம்பிக்கொண்டே இருக்கும். ஆட்சேபணைகள் கிளம்பக்கிளம்ப ஆராய்ச்சி

கள் வளரவளர உண்மை புலனாகும் என்று அவர்கள் எண்ணுவார்கள்.

ஆனால்; பாமரமக்கள் அவ்வாறு எண்ணுவது கிடையாது. ஏனெனில், அவர்களுக்கு விஞ்ஞான சாஸ்திரப்பரிச்சயம் கிடையாது. ஆகவே விஞ்ஞானரீதியில் ஒருவிஷயங்கண்டு பிடிக்கப்பட்டால் அதையே உண்மையென்று நம்புவார்கள். விஞ்ஞானசாஸ்திரி பார்த்துவிட்டார்; ஆகவே அதுவே சத்தியம் என்று பேசுவார்கள், இப்படிப்பட்ட விபரீத நிலைமையினாலேதான் மக்களில் பலருக்கு கடவுள் பக்தியும், மத பக்தியும்பாழாகிவிட்டது.

விஞ்ஞானத்திற்கும் மதத்திற்கும் எதற்காக சம்பந்தமிருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்களோ தெரியவில்லை! விஞ்ஞானத்தின் போக்கும், இலட்சியமும் ஒன்று. மதத்தின் போக்கும் இலட்சியமும் வேறொன்று. இரண்டும் ஒருதிசையாக ஓடுகின்றரெயில் கண்ட வாளங்கள் இரண்டு ஓடுவதுபோல் ஓடுகின்றன. இரண்டும் எந்தஇடத்திலும சந்திக்காது. பலர் மதத்தில் சிறிதும் கருத்துச் செலுத்தாமலே விஞ்ஞானத்தில் பூர்ண நம்பிக்கை கொண்டவர்களாகவுமிருகின்றார்கள் எனபதும் உண்மைதான். விஞ்ஞானமும் மதமும் போட்டா போட்டி சாஸ்திரங்களல்ல. ஆகவே இவ்விரு சாஸ்திரங்களையும் ஒன்றோடொன்றை ஒப்பிட்டுப்பார்ப்பது அர்த்தமற்ற விஷயமாகும்.

விஞ்ஞான சாஸ்திரமானது உலகத்திலுள்ள பொருள்கள் நிகழ்ச்சிகள் இவற்றுக்கு சம்பந்தப்பட்டது. மதமானது மானிட உள்ளத்தின் உலகத்தைக் குறித்து பேசுவதாகும். விஞ்ஞான ஆராய்ச்சியின் வினைவைக்கண்ணால் பார்க்கமுடியும். உள்ளத்தின் கருத்துக்களையும், உள்ளத்தின் உவகைகளையும், எழுச்சிகளையும் கண்ணால் பார்க்கமுடியாது. உள்ளத்திலேதான் உணரமுடியும்.

உத்தமமாணவன்.

(பரமானந்தவல்லி ஆச்சிரமமாணவர் கோ. பரமசாமி)

இவ்வுலகம் ஓர் சாதனசாலை, இச்சாலையில் பலரும் பலவகை சாதனங்களைப்பயின்று அவ்வவற்றிற்குரிய பலன்களைப்பெறுகின்றனர். அவற்றுள் ஆன்ம ஈடேற்றத்திற்கு வேண்டிய சாதனைகளைப்பயின்ற மாணவனை இங்கு எடுத்துக்கொள்வோம்.

தூய ஒழுக்கமும், கீழ்ப்படியும் தன்மையும் ஒரு உத்தம மாணவனுக்கு இன்றியமையாத குணங்களாகும். ஒருவன் மாணவனாக விளங்கும்போது பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றான். தனக்கு வேண்டிய அறிவையோ கல்வியையோ பெறுவதில்லை. அவன் குருவின் அன்பிற்குப் பாத்திரமாகின்றான். குருவின் அன்பிற்குப்பாத்திரமாகவே அவனிடத்து இன்றியமையாத நற்பண்புகள் சிறப்புற்றுவிளங்குகின்றன. தன்னடக்கம், பரிசுத்தம், தாழ்வு, மனப்பான்மை இவையாவும் ஒருங்குவந்து அம்மாணவனிடம்சரணாகதி அடைகின்றன. அடையவே அம்மாணவன் அன்பின் வடிவாய் அமைகின்றான். கருணையின் இருப்பிடமாய் விளங்குகின்றான். கனிந்த உள்ளமாய் காட்சி அளிக்கின்றான். தலையினும்பேற சுமந்தகையனுப் தன்னை மறந்து தனிப்பெருந் தலைவனுகிய எம்பிரானைத்தேடத்தலைப்படுகின்றான். இத்தகைய அன்பு நெறியிலே தலைப்பட்டு அரனடிசேரும் மாணவனது இலக்கணங்களைச்சிறிது கவனிப்போம்.

ஆகாயம்போன்று அபரந்த உள்ளம் படைத்தவனுகின்றான். தன்னிடத்தே வந்துசேருகின்ற தீயனவற்றையெல்லாம் எரித்து விடுகின்ற அக்கினியாக அமைகின்றான். யுத்தவீரன் போல் தம்மையெதிர்த்துப் போராடும் பிரபஞ்சப்படைகளை வெற்றி கொள்வதற்கு வேண்டிய சேனாகளையும்; படைகளையும் கூட்டுகின்றான். நாலாபக்கமும்பிரணவமாகிய "நாதப்பறையறைமின்" என்று ஆரவாரிக்கின்றான். தனிப்பெருந் தலைவனுகிய எம்பிரான் துணை வேண்டி பிரபஞ்சப்படையுடன் பொருது வெற்றிகொள்வதற்குச் சேனைகளைக் கூவியழைக்கின்றான்.

"ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப்பறை யறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனேற்றுக் கவசமடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோ நாமாயப் படைவாசாமே"

என்று பிரபஞ்சப்படைவாராது வழிகோருகின்றான். தீப்பெட்டியுடன் தீக்குச்சுச்சேர்ந்த(உரோஞ்சப்பட்ட)மாத்திரத்தே ஒளிபிரகாசிப்பதுபோல் மாணவன் சுருதியுத்தி அனுபவங்களால் குருவின் அருள் மொழிகேட்ட மாத்திரத்தே அறிவு பிரகாசிக்கின்றது. தன்மனவழிச்செல்வாமல் குருவின் வழிப்படிநடத்தலால் கப்பல்சென்றவழிச் செல்லாது அவனைத்தன்வயப் படுத்திச்செல்லும்மாலுமி போல் ஆகின்றான், கற்புக்கடம்பூண்ட பொற்புடைய மங்கையர் போல் நெறிதவருத ஒழுக்கங்களை மேற்கொள்ளுகின்றான். தீயை அகலாதும், அணுகாதும் குளிர்காய்பவன் போல் குருவை ஞானக்கினியாகக்காண்கின்றான். அதனால் அவன்குருவை அகலாதும் அணுகாதும் அருட்பேறு வேண்டுகின்றான். அரசள் ஆணையைக்கடவாது நடக்கும் மந்திரிபோல் குருவின்; ஆணையைக்கடவாது நடக்கும் கடப்பாடுடையனுகின்றான். இவையாவும் ஒருங்கமைந்தமாணவன் கல்லவும் தீயவும் நாடி ஏலாலையில்லாதஅருட்பாலைவேண்டிநிற்றலில் நீரைவிடுத்து பாலைஉண்ணும் அன்னமாய்அமைகின்றான். குருவைக்கண்டவிடத்து அருள்மொழிகளைத்தம் உள்ளம் நிறையக்கேட்டு அவற்றைத்தனியிடத்திலிருந்து அருள்மொழிகளைத் தம் உள்ளம் நிறையக்கேட்டு அவற்றைத்தனியிடத்திலிருந்து சிந்தித்தலிற் பாற்சுவையொக்கின்றான். இத்தகைய சிறப்பியல் வாய்ந்த மாணவன் தன்வாழ்வில்மறுமலர்ச்சி காண்கின்றான். உடனே சற்குருவைத்தேடியும் புறப்படுகின்றான்.

"அளிமலர் விட்டுவிட்டாய்ந்து மதுவுண்டகந்நிரம்பி
களிவந்திருந்த குருத்தீங்குறு நின்கவலையென் னும்
விளிவிணைவிட்டுவிட்டாய்ந்து வியன்குருமேவினின்று
தெளிவந்துநோக்கட்டிடு மளவுங் குருத்தேடும்"

என்பது ஆன்றோர் வாக்கு.

குருவைக்காணவேண்டுமென்று விருப்புற்றஉத்தம மாணவனுக்கு இயமம் (அவனது] வாழ்வின் பாதம். நியமம் வழிநடை ஆசனம் இருப்பிடம். பிராயாணமம் மனலயம், பிரத்தியாகாரம் மனத்தகத்தே இறைவனைக்கண்டுவழிபடல். தாரணை இறைவன் வடிவத்தை மனத்திற்தரித்தல். இவை முதலாகச் சொல்லப்பட்ட அட்டாங்க யோகங்களையும்: அமைவுறக் கொள்ளுகின்றான். இத்தகைய ஆற்றல் படைத்தமாணவனுக்குக் குருதரிசனங்கைகூடுகின்றது. குருவைக்கண்ட மாத்திரத்தே, 244ம்பக்கம் பார்க்க.

மரணத்தைப்பற்றிய சில குறிப்புகள்.

–ஸ்ரீ ராமக்கிருஷ்ண விஜயம்

மரணத்தைப்பற்றிய சிந்தனை வாழுகின்ற மனிதராகிய நமக்கு எதற்காக என்று பலர்கேட்கலாம். "அச்சத்தை விளைவிக்கக்கூடிய அப்பொருளைப்பற்றி ஆராய்ச்சியால் யாது பயன்? ஒழுங்காக ஒருமனிதன் வாழ்வது போதாதா? இறந்தபின் நமக்கு நிகழப்போவதைக்குறித்து ஏன் கருத்தைச்செலுத்தல்வேண்டும் என்ற நினைவால் பலர் மரணத்தைப்பற்றி யோசனை செய்யவும் மறுக்கின்றனர். இம்மறுப்புக்குக் காரணம் ஒருபாதி பயம், மற்றொருபாதி தவறான அறிவும் அறியாமையுமே. ஆனால் மரணம் இன்னது என்பதையும், அதற்குஅப்பால் உள்ளது இது என்பதையும் அறியாமல் நம்மால் வாழ்க்கைஇன்னதுஎன்பதை அறியஇயலுமா? மரணத்திற்குப்பின் வாழ்வில்லையெனின், இவ்வாழ்வோடு யாவும் முடிந்துவிடுகின்றன எனின், வாழ்வில் நிகழும் செயல்கள் அனைத்தும் அப்பால்யாதொரு பயனையும் விளைப்பதில்லையெனின், இவ்வாழ்விற்கு மகிப்பு ஏது? இம்மையில் நாம் செய்யும்முயற்சிகளின் பயன் மறுமையில் நம்மை வந்து சாராது என்பது உண்மையெனின், நமது பொழுதும் சக்தியும் வீணுகாதுள்ளன என்று எவ்வாறு உறுதிகூறுவது?

பிறப்பு, இறப்பு, எனும் இரு எல்லைகட்கு இடையேயுள்ள வாழ்விற்கு யாம் அறிந்தவரை, வெளிப்படையான பொருள் ஒன்றும் இருப்பதாகத்தெரியவில்லை, என்றே நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும் நாம் இயற்கையறிவின்படியே காரியங்களை இயற்றிவருகிறோம். அவ்வாறு செய்தல் நமக்கு இனிமையாகவும் உள்ளது; அதனால் நமது வாழ்வுமுறை மெய்யானது என்ற முடிவுக்கு வரலாமா? நாம் ஏமாற்றமடைந்திருக்கலாம் என்பதும் ஒருமுடிபு தானே. நமது அறிவுதான்எவ்வளவுகருஞ்சியது நமது இயற்கை அறிவுஎல்லைவு தவறுகளை உண்டுபண்ணியுள்ளது? ஆயிரக்கணக்கானவருடங்களாக நாம் உண்மையை ஒருவாறு இருப்பதாக நோக்கிவந்துள்ளோம். ஆனால் தற்காலவிஞ்ஞான ஆராய்ச்சிஅக்காட்சிகளையும், முடிவுகளையும் தவறானதென்று எடுத்து நிலைநாட்டிவிட்டது; ஆதலால் பொருள்கள்நமக்குத்தோன்றுகிறபடி உண்

மையில் இல்லை. இதைப்போல வாழ்க்கையைப்பற்றி நாம் பெற்றுள்ள இயற்கையறிவுந்தவறாய் இருக்கலாம். நம்மிற்பலர் அறியாமையில் அழுந்தியுள்ளோம். பெரும்பாலார் அக்கருத்தை ஆதரிப்பதனால் அக்கருத்து உண்மையாதல்வேண்டும் என்பதில்லை. அபிப்பிராயத்தை மதிப்பிட, எண்ணிக்கை உதவாது நிறுத்தல் வேண்டும் என்பர் அறிஞர். இக்காரணத்தால் நாம் வாழ்வைஉண்மையாக அறியவேண்டுமாயின், அதனை ஆழமாகக் குடைந்தும் திருவியும்ஆராய்தல் கட்டாயம்; வாழ்க்கையைப்பற்றிய நமது அறிவு மேலெழுந்த வாரியாயிராது ஊன்றிக் கவனித்ததன் பயனாக எழவேண்டுமாயின் மரணத்தையும் நாம் அறிதல் வேண்டும்.

கற்காலத்திலே மக்கட்கு மரணத்திற்குப் பின்னுள்ள நிகழ்ச்சிகளில் மிக்கஇரத்தை உண்டாயிருக்கிறது. மனிதஆவிகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவார், மரணத்திற்குப் பின் மனிதனது வாழ்வின் நிலையைக்காணமுயலுகின்றனர். மனித உடல் இறந்தபின்னும் அவனிடம் இறவாத ஒன்று உண்டு என்று நம்புகின்றனர். இதன் பயனாக மரணத்திற்குப் பிந்திய மனித வாழ்வைப்பற்றிப் பலகதைகள் பிறந்துள்ளன. இறந்தவரான சிலருடைய ஆவிகள்பூமியிலே அவர்கட்கு பிரியமான மனிதர்களோடு நேரே தொடர்புவைத்துக்கொள்வதாகக் கூறுகின்றார்கள். வேறு சிலர் ஆவிகள் பிறமனிதர்களைக் கருவிகளாகக்கொண்டு அவர்களைச் சாரமுயல்கின்றன என்றே, அவர்களைத் தம்வசமின்றி எழுதச்செய்வதால் நம் கருத்துக்களை அவர்கட்கு வெளியிட முயல்வதாகவோ கூறுகின்றனர். அவ்வாறு சார்தலும் கருத்துக்களை வெளியிடுதலும் உண்மையானாலும் அவற்றால் நாம்அடையும் திருப்தி ஒருக்காலும் நிலையாயிருப்பதில்லை; அவற்றால் நாம் அடையும்பயனே சந்தேகமானது. அன்றியும், இம்மாதிரிக் காரியங்களில் ஏமாற்றமடைதற்குரிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

உதாரணமாக (தம்வசமின்றி எழுதும்) ஆவேசஎழுத்தைச் சற்றுஆராய்வோம். இறந்துபோனவரது ஆவிகள் நமக்கு கூறுவதாகக்கருதும் புத்திமதிகள் உண்மையிலே அவர்களிடமிருந்து வருவனவா என்பதை ஐயமறஅறிதற்கு வழிகள் இல்லை. ஆனால் உயிருள்ள மனிதர்களும் அப்பாவச எழுத்தைச்சிலரிடம் உண்டாக்குகின்றனர் என்றும் தற்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்ற

னர். இதுசம்பந்தமான ஒருநிகழ்ச்சியை மட்டும் கருதுவோம். மூன்று சகோதரர்கள் நன்கு கல்வி கற்றவர்கள். கணிதநூலிலும் வழக்கு நூலிலும் வல்லவர்கள்; ஒருசமயம் ஆவேச எழுத்துப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தாமறியாதே தத்துவநூல் சம்பந்தமான சில கட்டுரைகளை எழுதலானார். அவர்களது இடத்திற்கு ஐந்நூறு மைல் தூரத்திற்கு அப்பால் வாழ்ந்த ஒரு பெருந்தத்துவநூல் அறிஞர் தம்மிடம் ஆவேசத்தினால் தாம் மெய்மறந்து எழுதியவை சிலவை என்று அச்சகோதரர்கள் நம்பியிருந்தனர். சிறிது காலம் சென்றபின், அச்சகோதரர்களில் ஒருவர் ஆவேசஎழுத்தைஎழுதும் போது தமக்கு அத்தத்துவநூலறிஞர் தீக்ஷையளித்ததாகவும் ஐயமற உணரலானார். கடைசியாக ஒருநாள் மூவரும் அந்தஅறிஞரைக்காணச்சென்றனர். அவரது இல்லத்தைச்சார்ந்ததும், அவரது சிடருள்ஒருவரும் பிறரும் காண வந்திருப்பதாக அவருக்குச் சொல்லியனுப்பியிருந்தனர். அந்த அறிஞரோ, அவர்களில் ஒருவரையும் தாம்அறியாதவர்என்றும் அவர்களில் எவர்க்கும் தாம் தீக்ஷை அளித்ததில்லை என்றும் மறுமொழிகூறினர். தங்கள்மீது ஆவேசித்து அவர் ஏராளமாக எழுதினர்என்று மூன்றுசகோதரர்களும் எழுதியதாகக்கூறியபோது அவர் அவ்வாறு செய்யவே இல்லையென்றும் அவர்கள் எழுதியவற்றுக்குத் தாம்சிறிதும் பொறுப்பாளர்அல்லரென்றும் காண்டிப்பாகக் கூறினர். சகோதரர்கள் மூவரும் பெரும் ஏமாற்றத்தோடுமீண்டார். தமது ஆவேச எழுத்தின் பொய்மையை நன்குணரலானார்.

241ம்பக்க தொடர்ச்சி

"மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்க்கேன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பிவெதும்பி யுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாய்என்னைக்கண்டுகொள்ளே"

என்று அன்பின் பாசத்தினால் ஆசிரியனைப் பிணைக்கின்றான். இத்தகை அன்புவழி நின்றமாணவனிடத்தில் குருவுக்கு அவரையறியாமலே ஒரு பாசம் ஏற்படுகின்றது, எனவே குருவின் அன்புக்கு அவன் பாத்திரமாகின்றான். குருவின் உள்ளத்தில் அன்பு வெள்ளம் பெருக்கெடுக்கின்றது. அவர் தமது கருணையைமாணவன்மேல் காட்ட உன்னுகின்றார். அவரது ஆசீர் வாதத்தை மாணவன் பெறுதற்கு சற்குருவை வியக்கின்றான். (தொடரும்)

ஓம்

நான் கண்ட காட்சிகள்.

[ஸ்ரீசுவாமி ஸச்சிதானந்த சரஸ்வதி]

பிரிய அமராத்ம!

"வெள்ளிப் பனிமலை மீதினிலே-காட்சி
வேணதுண்டு மிகக் காணுதற்கே
அள்ளிப் புசித்திடும் நல்விருந்தாம்-கருத்துக்
கத்தனையும் தந்தது ஆண்டவனே"

நான்கண்ட காட்சிகளை நீயும் காணவேண்டுமா? புறப்படு போகலாம்.

இயற்கையின் வாயிலாக இறைவனைக்காண இமயமே ஏற்ற இடம். இவ்வியற்கைக் கோயிலின் கோபுரவாசலே ஹரித்துவாரம் (ஹரி--துவாரம்) இதனுள் நுழையுமுன் தோலாற்பேர்த்த இத்தேகவாசனையெனும்செருப்பையும், ஆணவச்சட்டையையும், அகற்றி விடவேண்டும். அகமும் புறமும் தூய்மைபெற அன்னபானாதியின் குளிர்ந்த தெளிந்த நீரிற் குளிப்போம். அஞ்நிம்சை ஆடையை உடுத்திக்கொள். பிரமச்சரிய பூதியை உடம்பெங்கும் தரித்துக்கொள். சத்தியசாந்துப்பொட்டிடு .அன்பெனும் மலரை ஏந்திக்கொள் இனிஉள்ளேசெல்வோம்.

பலமைல்கள்வரை பஸ்ஸிலேயே செல்லலாம். ஏறிக்கொள் ஒருவண்ண மூட்டை முடிச்சுகள்; ஒன்றும் வேண்டாம். இங்கேயே போட்டுவிடு. இங்குமுக்கியமான நல்ல சாமான்களாவது இருக்கட்டுமென்கின்றாயோ. நல்லது கெட்டது இரண்டுமே சமைதானே--பாவம் புண்ணியம் இரண்டினாலும் பிறவியுண்டு. வேண்டாம் உபத்திரவம். ஆசைப்படப்பட ஆய்வருந்தான்பார்--பொறுப்பு மூழுமையும் அவன் மேல் போட்டுவிடலாம். அவசியம்காப்பாற்றுவான். யோகமார்க்கத்துக்கு வேண்டிய விஸ்வாசம், நம்பிக்கை இங்குமவேண்டும்.

இதுதான் ரிஷிகேசம். சன்யாசிகளும் சாதகர்களும் நிறைந்த இடம். அடுத்தது முனிகிரேத்தி, (ஹிந்திப்பெயர்) ரேத்தி

என்பது மண், பூமி என்றுபொருள்தரும். [முனி–கி–ரேத்தி] என்றால் முனிவர்களின் வாசஸ்தலம் இவ்விடத்திற்கு இப்பெயர் பன்னெடுநாட்களாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனந்தகுடிர் என்பது சற்போது ஏற்பட்டதபால் நிலையப்பெயர். இங்குதான் உலகப்புகழ் வேதாந்தயோகி பூரணயோகம் கண்ட புனிதர் ஸ்ரீலஸ்ரீசுவாமி சிவானந்தசரஸ்வதியவர்கள் தங்கி அகிலமெங்கும் ஆன்ம விளக்கம் செய்து வருகிறார். வாரும், இறங்கிச்சென்று தரிசித்து ஆசிபெற்றுவருவோம்.

பார்த்தாயா? இப்போது மனதில் எவ்வளவு தெளிவும் அமைதியும் ஆனந்தமும் ஏற்பட்டுள்ளது. ஞானிகள் சன்னிதியில் ஒரு சிறிது நேரம் இருந்தாலும் மிகவும் விசேடமான பலன் கிட்டும். இதனால் தான் ஸ்ரீசங்கராசாரியார் "ஜீவன்முக்திநிலை"எய்தமுகற்படி சத்சங்கம் என்று கூறியுள்ளார். இனிசெல்லுவோம் பஸ்நமக்காக காத்திருக்கிறது.

பாதை கங்கைக் கரையருகே செல்லுகிறதல்லவா. ஆம் அன்னையின் அருளைப்பெற்று அவர்மூலமாகத்தான் தந்தையை அடையலாம். ஏன் இங்கு பாதையோரமாக இத்தனை மோட்டார்கள் நிற்கின்றன, என்று எண்ணுகிறாயோ. இவையெல்லாம் மேலிருந்து கீழிறங்குகின்றனமுதலில் செல்லும் உரிமைமேல் நோக்கிப்போகின்றவர்க்கேதான்; என்பது அறியாயோ பாதை மிகவும் குறுகலாக இருப்பதைப்பார். ஆன்மூக நெறியும் இப்படித்தான் இருக்கும். கத்திமுனைபோன்று அதிக ஜாக்கிரதையாகச்செல்லவேண்டும்.

சரி மோட்டார் ஓட்டம் நின்றுவிட்டது. இறங்குபிறர்உதவியெல்லாம் ஒருகுறிப்பிட்ட எல்லை வரையிலுமே. அதற்கு மேல் நாமேதான் முயன்று செல்லவேண்டும். இனிப்பிரயாணம் கால்நடையிற்றான்.

என் பசிக்கிறதே? ஆனால் சிறிது லேசான உணவு அருந்தவோம். அதிகம் உண்டால் மேலே நடக்கமுடியாது அதிகம் உண்ணுமேலே இருப்பவனுக்கும் அதிகம் உறங்குபவனுக்கும் உறங்காமலே இருப்பவனுக்கும் யோகம் சித்தியாது என்பது கீதையில் கண்ணன்வாக்கு.

என்ன! முகத்தைச் சுளிக்கிறாய்: உணவு ருசி எப்படியிருக்கிறது; புளி காரம் தாளிதம் முதலியன ஒன்றுமே இல்லையோ! ஆம் இதுதான் இங்குகிடைக்கும். யோகிகளுக்கும் ஏற்றதும் இதுதான், கோதுமைரொட்டி, வெந்தகாய்கறி, சிறிதுபருப்புலே சாக இருக்கும் உப்புக்கூட கடலுப்புஅல்ல பூமியில்வெட்டியெடுப்பது. பசிஇருந்தால் ருசிதெரியாது, பசி நோய்க்கேற்ற மருந்தேயுணவு, ருசிக்காக உண்பது விஷம். நன்குமென்று விழுங்கு பழகப்பழக சரியாய்விடும்.

ஒருவாறு உணவுமுடிந்து இளைப்பாறியாய் விட்டதல்லவா, இனி நடபோகலாம். ஓம்! அந்தமாதிரி ஓடவேண்டாம் விரைவில் களைப்பு ஏற்பட்டுபிறகு உள்ளதும் குறைந்துவிடும். ஆரம்ப சூரத்தனம் எதிலும் கூடாது. இப்படித்தான் ஒருசிலர்விரைவில் கடவுள்தரிசனம் பெறவேண்டுமென்றுமுதலில் அதற்குவேண்டிய உள்ளப்பயிற்சிகளாகிய இமயம்; நியமங்களின்றித் தாண்டிக்குதித்து பிறகு ஓரேயடியாகக்கீழ்நோக்கி விடுகிறார்கள். ஓரேநிதானமாகநடக்கவேண்டும்.

என்னதயக்கம்! வழியவ்வளவு ஏற்றஇறக்கமாக இருக்கிறதோவாழ்க்கைப்பாதையும் இப்படித்தானே. உயர்வும்; தாழ்வும், நிந்தையும்; ஸ்துதியும்; சுகமும்; துக்கமும் சகஜம் இவற்றைச் சமமாகக் காண்பவன் ஞானி, இவைகளால் மனம் அலையாதிருக்கப்பயில்வதே யோகம். "சமத்துவம் யோக உத்தியதே" என்று கூறுகிறது கீதை. இவ்வியற்கைக்காட்சிகளில அன்னை பராசக்தியின் இன்பமும் காணமுயல்வதில் கருத்தைச் செலுத்திக்கொண்டேநட அலுப்புத்தெரியாது. மேலும் மேலும் நடக்க ஊக்கமளிக்கும் ஒருயோகியும் இது போலவேதான் பாதையில் அவ்வப்போது ஏற்படும் திவ்விய ஒலி கேட்டல் ஒளி காண்டல் முதலிய அனுபவங்களால் ஊக்கப்பட்டு விரைந்து முன்னேறுகிறார்.

இதோபார்! எத்தனைசிறுசிறு அருவிகள் ஏன், எங்கு இத்தனை வேகமாகப் போகின்றன என்று யோசித்துப்பார். அவைகளின் நீர் எவ்வளவு பரிசுத்தமாக பளிங்கு போன்றுள்ளது, இவ்வருவிகள் ஒவ்வொன்றும் தெய்வநெறியில் விரைந்து முன்னேறும் ஒவ்வொரு சாதகர்கள் அவகளுக்கு முக்கியமாக வேண்டிய

உள்ளத்தூய்மையைக் காட்டுகிறது பளிங்கனைய அருவிநீர்; எங்கு போகின்றன? கீழே ஓடும் கங்கையாற்றை நோக்கி: ஒருஞான குருவை நோக்கிப் பறந்தோடும் சீடகோடிகள்போல. கங்கையோ தான் ஆகியில் புறப்பட்ட இடமாகிய கடலையடைந்து கலந்து ஆனந்த மெய்தியவள். தன்போன்றுமற்றையோரும் இன்பமூற வேண்டியழைத்துச்செல்லுகிறாள். ஆத்மானுபவம் எய்தியஞானி ஒருவர் தன்னாயடைந்த சீடர்களையும் பொங்கித்ததும்பிப் பூரண மாய் வீளங்கும்பேரின்பவெள்ளத்தை அள்ளிப்பருக அழைத்தே கல்போல் எப்படிமுடிவில் அருவிகளும் கங்கையும் கடலுடன் ஒன்றிக்கடலரேயாகிறதோ அதுபோல், உண்மைச்சீடர்களும் உயர்ஞானியும் இறையொடு கலந்து இரண்டற்ற நிலையெய்துகிறார்கள். இதுவே மக்களாய்ப்பிரந்தோரனைவரும் அடையமுயலவேண்டிய பெருநிலை.

இரண்டு மூன்று நாட்களாக நடக்கிறோம். நடவாநடப்பது சுலபமாகத்தெரிகிறது அல்லவா. இரவுநேரங்களில் சிறு சிறு குடிசைகள் கொண்ட "சட்டி" என்று சொல்லும் சங்குமிடங்களில் எளிய படுக்கையில் படுத்துறங்கி எளிய உணவை உண்டு இறைவன்சிந்தனையிலே மூழ்கியிருப்பதால் மனம் எவ்வளவு அமைதியாக இருக்கிறது.

நில், இங்கென்ன நடக்கிறதென்பதைப்பார். கூடவந்தவர்; நேருங்கிய உறவினர். மனிதச்சட்டையின் காலம் முடிந்து விட்டது. நடக்க நடக்க இறந்துபட்டார். இவர்கள் எவ்வளவு அமைதியாக இறைவன் செயலேஎண்ணியியந்து கொண்டேஉடலை கங்கையில் எறிகிறார்கள் என்பதைக்கவனி. இப்போது அந்தச் ஜீவனுக்கு யார்துணைசேரும். கினையும், காசும், பணமும், நாடும் வீடும், பேரும், புகழும், கைவிட்டுவிட்டன. பாவ புண்ணியமென்ற இருவினைகளே பற்றித் தொடர்கின்றன, இதோ இவர்கள் புறப்பட்டு விட்டார்கள். இருந்து சிறிது அழுது புலம்பக்கூட இல்லையே, பார்த்தாயா? சம்சாரபந்தம். தாலுக விலகுவதை அழுது புரண்டு தொண்டிருந்தால் தாங்கள் மேற்கொண்டயாத்திரை முடிப்பதெப்படி. வீட்டில்இச்சம்பவம் நடந்திருந்தால் இப்படி போவார்களா?

நமக்குச்சொந்தமெனக் கருதியிருக்கும் தேவப்பற்றுதலுக்கு இந்தக்கதியே. வழிநெடுக எத்தனை ஆபத்துக்கள். சிலஇடங்களில் சிறிது தவறினாலும் ஆழ்ந்த பள்ளத்தாக்கில் அரற்றிக் கொண்டோடும் ஆற்றில் விழவேண்டியதுதான். மூர்ட்டுத்தனமாக மூட்டைசுமந்துவரும் கோவேறுகழுதைகள் இடித்துத் தள்ளினாலும் சரிதான். ஆனால் இதையெல்லாம் எண்ணிக்கொண்டு பயந்தால் இருந்த இடத்திலேயே இருக்க வேண்டியதுதான். பயத்தை அறவே களைந்துதேகம் போனாலும்சரிதான்என்றுதுணிந்துமேல் நோக்கிவரவில்லையானால் இவ்வளவுதூரம் வந்திருக்க நம்மால்முடியுமா. ஆகவே மரணபயமும் கேடுபற்றும் எப்படி நீங்குகிறதென்று கவனி. இதுபோன்ற எத்தனை பலஉண்மைகளை அனுபவவாயிலாக அறியஇவ்விடிய யாத்திரை உதவுகிறதென்றுபார்.

ஆகா, அதோபார் பரமனின் திருவுருவை பனியென்னும் வெண்ணிற விபூதிபூசிய மேனி, சிரசில் கருநிறமேக சடாபாரம் உச்சியில் இளம்பிறை தோன்றும் இனிமையைப்பார் சடாமகுடத்தில் அடங்கிய கங்கை சலசலத்தோடி வருவதை நோக்கு உள்ளம் பூரிக்கிறது. உரோமம் சிலிர்க்கிறது, கேதாரநாதரின்காணரியகாட்சி. இறைவனீதி கதி.

"ஓம், கேதாரநாதன், பாதாரவிந்தம் ஆதாரமென்னச்சேதாரமில்லையே. ஓம் பாடு. நீயும் பாடு. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓது.

அமைதியே உருவான இவ்விடத்தில் எத்தனை நாளிலிருந்தாலும் மனச்சலிப்பேயில்லையே. பிரிய மனம் வரவில்லையே, இருப்பினும் புறப்படுவோம். இன்னும் துங்க நாதனையும், பத்ரிநாதனையும், தரிசிப்போம். போலோ. கேதார் நாத்கி ஜே.

பல ஏற்ற இறக்கங்களில் நடந்து பல இரவுகளில் கூரை வீடுகளில் கோரைப்பாயிற்கிடந்து பல்மைல்தூரத்தைக் கடந்து சமுத்திர மட்டத்திலிருந்து சற்றேறக்குரைய 12000 அடிஉயரமுள்ள துங்கநாத் உச்சியையடைந்தோம். என்ன துள்ளிக்குதிக்கிறாயே உன்னையறியாது ஆனந்தம்பொங்குகிறதோ. ஆமாம்காரணமில்லாமலல்ல. ஆனந்தரூபன் துங்கநாதன் இங்கு கோயில்

கொண்டெழுந் தருளியிருக்கிறார். ஆலயத்துள் போவோம் வா—ஹாளண்ணபோரானந்த உணர்ச்சி பாடத்தோன்றுகிறது, ஓம் ஆனந்தஹோம்.

"துங்கன் பதமலர்ப் பங்கய மிரண்டும்தங்கும் மனங்களி, பொங்குந்தரமதே" கூடிய அன்பில் கூறும் பாக்கள் வாடியேய முழியும் வண்ணப்பூக்களின் மேண்மைத்தன்றே. ஆனந்தமேன் னும் சூட்டினுல் பொங்கிவரும் மன உணர்ச்சியெனும் பாலைபொ ங்கிப்போய் விடாதபடி இவ்விடத்தின் தட்பநிலை என்னும் தண் ணீர் தடுக்கிறது.

"துங்கநாத முருகனே போற்றி.

இனிவிரைந்து பத்ரிநாத்செல்லுவோம். நெடுந்தூரம் வந்து விட்டோம். ஆதோபத்ரிநாத்புரி தெரிகிறது. [புரி—ஊர்] வாவா சிக்கிரம செல்லுவோம். குளிர் மிகநடுங்குகிறதோ? பயப்படாதே. ஒருகுளத்திற்கருகே நெருப்பை மூடிவைக்காய்ச்சி இறைவன் நம க்கு வெந்நீர் தயார்செய்து வைத்திருக்கிறார். சென்று குளிப்போம் வா. என்ன பிரமித்துவிட்டாயே? முன்னவனே முன்னின்றுல் முடியாத காரியமும் உளதோ. இயற்கையாகப் பூமிக்குள் இருந்து கிளம்பிவரும் கொதிநீரை வாய்க்கால்வழியாக இக்குள த்தில் விழுமபடி செய்திருக்கிறார்கள். இது நிறைந்து மறு புறம் வெளியேஓடிக்கொண்டிருக்கிறது; திடதேகிகள் உள்இறங்கிக்குளி க்கலாம். அதுவும முதலில் கொஞ்சமகொஞ்சமாக கையில்அள்ளி உடம்பில் தேய்த்து தேக உஷ்ணத்தைச் சமன் செய்து கொண்டு பிறகு இறங்கவேண்டும், —உம்—ஆரப்பி எவ்வளவு இதமாக இருக்கிறது பார்த்தாயா. நீண்டநேரமிருந்தாலும் உடம்புக்கு கெடுதல்விளைவிக்காது. இது கந்தகக்குழம்பு கலந்தது, போதும் மேல்வந்து துவட்டிக்கொள்.

இப்போது ஆலயத்துக்குச் செல்லுவோம், முன்னர் கண்ட கோவில்களைவிட இதுபெரிதாகவும் வேலைப்பாடுள்ளதாகவும் இரு க்கிறதல்லவா? பரமனின் சக்திஅ சமானவரும் காத்தற் தொழி லாற்செய்பவருமான நாராயணன் இருப்பிடமிது என்று கூறுமலே தெரிகிறதுபார், உள்ளேசென்று தரிசிப்போம்,

ஹே பரந்தாமா! பக்தவச்சலா, சத்திஸ்வரூபாதெய்வகெ ரியில் திடமுடன் செல்லத்தக்க திறமையளித்தருள் அடியேனு

பிரார்த்தனையும் பலனும்.

(சரஸ்)

முழுமனதுடன் பகவானைப்பிரார்த்தனைசெய்தால், நாம்எண் ணிய காரியங்கள் சித்திபெறும்என்பது புராணகாலங்களிலிருந்து அனுபவித்தறிந்த உண்மை.

தேவாதி தேவர்களும், பிரம்மவிஷ்ணுக்களும், அசுரர்களுக்கு இடர்வந்தபோதும் உலகத்திலே தோன்றிய அதர்மத்தை அழிக்க விரும்பியபோதும், ஆதிமுதற்பொருளை மனமாரப்பிரார்த்தித்து, விமோசனங்கண்டார்கள் என்ற உண்மையைப் புராதனப்புராண நூல்கள் எடுத்துரைக்கின்றன.

இக்கலியிலும்கூட பல மகான்கள் பிரார்த்தனையின் மூலம் காரியசித்திபெற்று, பிரார்த்தனையின் உன்னதமகிமையை உலகத்தி ற்கு நன்கு உணர்த்தியிருக்கின்றார்கள்.

பிரார்த்தனையிலே இருவகையுண்டு. ஒன்று, சொந்தநலனை மனத்திற்கொரி பிரார்த்திப்பது, மற்றொன்று, பொதுப்படை யான உலகநன்மைக்காகப் பிரார்த்தனை செய்தல்.

முற்பக்கத்தொடர்

டைய எளிய பாமலரை ஏற்றுக்கொள் "பதரிச்சம்மலே கதறிக் கைதொழ தெறிச் செம்மனதுதரிக்குமே" இன்குறிறது இருந்து தியானம் செய்வோம், ஆஹா! என்ன அற்புதக்காட்சி இதுவரை நாம் பார்த்த இடங்களிலெல்லாம் ஒருசோகக்கண்முன்தோன்றும் போது எத்தகைய பேரானந்தமளிக்கிறது.

இதோ முதலில் சாந்தசொரூபனை கேதாரநாதரின் சிகரம் சத்ருபம், மத்தியில் துங்கநாதரின் ஆனந்தத் திருவுருவம் அடுத்தது சத்தி அம்சமான பத்ரி நாராயணன் சித்ரூபம்.

சிவன் ஒருபாலும் உமைஒருபாலும் ஸ்கந்தன் மத்தியிலு மாக இருந்து ஸோமாஸ்கந்தமூர்த்தத்தில் தோற்றமளித்து சச்சி தானந்தத் தன்மையை விளக்கி நம்மைப்பேரானந்தப் பெருவாழ் வில் திளைக்கவைக்கிறான் இறைவன்.

முதல் வகைப் பிரார்த்தனை— அதாவது அவர்களே அவரவர்களின் சொந்தநலனுக்காகச் செய்யப்படும் பிரார்த்தனை பொதுநன்மை ஒன்றுமில்லாவிடினும் பிரார்த்தனை பலனளிக்கும் என்ற கருத்துடன் மட்டும்நிற்கும். ஆனால், இரண்டாவதாகச்சொன்ன பிரார்த்தனை - உலகநன்மைக்காகச்செய்யும் பிரார்த்தனை -விசேடமானது. மகான்கள் செய்யக்கூடிய பிரார்த்தனையெல்லாம் சொந்தநலனுக்காக இராது. உலகமக்களின் பொதுநலனுக்காகவேதான் இருக்கும். காரணம் என்னவெனில் மகான்களுக்குச் சொந்தநலனும் அயல் தேவையுங்கிடையாது. உலகத்தின் க்ஷேமம்தான் அவர்கள் கண்ணெதிரில் சர்வதாகாட்சி தந்து கொண்டுநிற்கும். உலகம்வாழத்தாங்கள்வாழ்கிறார்கள். உலகத்துக்காகவே சர்வேசுவரனைப் பிரார்த்தித்தார்கள். உலகமக்கள் அனுபவிக்கும் இன்பத்திலே இன்பத்தைக்கண்டார்கள். அதர்மமும் பலாத்காரமும் ஒழியப்பாடுபட்டார்கள். வெற்றியும்கண்டார்கள் எல்லாம் பிரார்த்தனையின்பலன்.

சமீபத்திலே நடந்தஉண்மையைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் பலகாலமாய் மழையில்லாமல் மக்களும் கால் நடைகளும குடிதண்ணீருக்காகப்பட்ட இன்னல்இம்மட்டல்ல.

சென்னையில் முதல்மந்திரி ஸ்ரீ இராஜாஜீ பொறுப்பேற்றசமயம் அது. தண்ணீர்ப்பஞ்சத்தைக்குறித்து அப்பெரியார் என்னசொன்னார். மழைக்காக ஆண்டவனைப் பிரார்த்தனை செய்வோம். ஆண்டவன் அருளுவான் என்றார். வேறுசில கட்சிகளின் தலைவர்கள் கேலிசெய்ததையும் பொருட்படுத்தாது, அவர் பிரார்த்தனையின் மகிமையை சொல்லி, மக்களைப் பிரார்த்தனைசெய்ய தூண்டினார். ஸ்ரீ இராஜாஜீயின் யோசனையை மக்கள் ஏற்று முழுமனதுடன் பிரார்த்தனை செய்தார்கள், என்ன ஆச்சரியம்! வர்ணபகவான் தன் அருளைப்பூரணமாய்ச்சொரிந்து தள்ளினார், புழலேரியில் 18 அடிஉயர்ந்தநீர்மட்டம் குளம் கிணறு எலலாம் நிறைந்தன. சென்னைமட்டுமின்றி பிறஇடங்களிலுங்கூட நல்ல மழை பெய்திருக்கிறது, மக்களின் உள்ளங் குளிர்ந்திருக்கிறன.

எதிர்க்கட்சிக்காரர்களும் நாஸ்திகம் பேசும் அறிஞர்களும் வாயடைத்துப்போகும்படியாக சம்பவம் நடந்திருக்கிறது. இவ்வற்பிரார்த்தனையின்மூலம் நாம் சாதித்தஉண்மையாகும், யாரும் மறுக்கமுடியுமா?

சான்றோர் உபதேச சாரம்.

(பொன்னூரம்)

9 சிவமே அன்புரு ஞானம்தயை அருள்
சிவமே சக்தியம் சுந்தரம் சாந்தமும்
சிவமே நன்னெறி சுடரொளி தண்ணளி
சிவமே செல்வமும் நலம்நிறை அறமெலாம்.

10 தந்தை தாயுமாய் தாரமும் யாவுமாய்
பந்தமாகிப் பின் பந்த மறுப்பராய்
விந்தை யாகிய அணுவுக்குள் வித்துமாய்
எந்தைதா னெங்கும் வியாபகம் என்றறி

11 உலகும் யாவும் உயர்தனிச் சோதியாய்
கயிலையின் ஆற்றலாய் கலைகட் கப்பாலுமாய்
நிலவி யாவையும் நிசழ்த்திடும் நிகரிலாத்
தலைவனே சிவன் தனிப்பெரும் நாதனே

12 தந்தை தாயுமாய் நமர்பந்து யாவுமாய்
அந்த மற்றதாய் ஆதியு மற்றதாய்
சிந்தைக் கெட்டிடாச் சிற்பர சோதியாம்
எந்தையே சிவம் எங்கும் வியாபியே.

13 விண்ணி லாவவே விரிந்து பரந்துமே
தண்ணி தாயற்ப அணுவினுள் நுட்பமாய்
பண்மிகுந்த இப் பரிநிறை சக்திதாள்
உண்மை யாம்சிவம் உற்றறி யீயிதை.

14 உடைய நாதன்தன் உள்ளுறு சக்தியுள்
உடைய தோர்சிறு ஊன்றொளி யேயுயிர்
விடைய பாசமாய் விளங்குமிவ் வுலகமும்
உடையா மீறுயிர் உலகம் அனைத்தியே

15 மண்ணில் மக்களும் மாக்களும் புட்களும்
எண்ணில் தாவரம் எவ்வகைச் சீவனும்
விண்ணில் உள்ளவும் விளங்கும்ஐம் பூதமும்
அண்ணல் எந்தையின் அருளினை யாகுமே.

Registered at the G P O as a News paper No H C 59 300

பாலர்நேசன்:-

மாதவெளியீடு
வருடசந்தா ரூபா 2
தனிப்பிரதி சதம் 15

விலாசம்; K. P. முத்தையா, சுண்டிக்குளி

இன்றைய உலகில் குழந்தைகளின் உளப்பண்பைக் கெடுக்கும் பத்திரிகைகள் அதிகம் வருகின்றன. பாலர்நேசன் உளப்பண்பைக் கொடுக்கும் நோக்கத்துடன் தோன்றி இருக்கிறான். "சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள்" என்று "யேசுநாதர்" கூறியது போன்று பாலர் நேசனிடம் குழந்தைகளை வழிப்படுத்திவைக்கவேண்டியது ஒவ்வொரு அறிஞரதும் கடனுகும். "சரியாகத் தொடங்கப்பட்டவேலை அரைவாசி முடிந்ததற்குச்சரி" என்று "பிளாற்றோ" என்பவர் கூறியது போன்று பாலர்நேசன்முதல் இதழிலேயே மகத்தான வெற்றி கண்டிருக்கிறான். பாலர்நேசன் எப்பொழுதும் பாலனாயிருக்க வாழ்த்துகிறோம்.

முருக தத்துவம்.

ஆசிரியர்:- சுவாமி அத்வயானந்த சரஸ்வதி

விலாசம் சிவானந்தசாதனாலயம்
திருநாங்கோய்மலை, முசிறிதாலுகா, திருச்சிஜில்லா, தென்னிந்தியா
விலை அணா 3.

இச்சிறு நூலில் "ஸுதகோபாஸ்கரன்" என்னும் நூலின் சாப்புச்சுருக்கமும் அதன்விரிவுரையும் சேர்க்கப்பட்டதாகும், இதன்மூலம் முருகதத்துவத்தை திடபமும் நுட்பமுமாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

B. S. கலிராஜு செட்டியார் அவர்களால்
வெளியிடப்பட்ட

* வடகோவை வேண்முகப்பிரகாசம்
* சரவணபவ எழுத்துப்படம்

ஆகியவை இரண்டும் பூஜைக்கு சிறந்தவை.
படம் ஒன்றுக்கு விலை 1-8-0 தபால்செலவு தனி

பாலதண்டபாணி பிக்சர் ஹவுஸ்
தேரடி வீதி திருப்பூர் S. I. Ry

கௌரவஆசிரியர் க. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர் நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி இலங்கை
அச்சுப்பதிப்பு சரவண அச்சகம் நாவலப்பிட்டி 15-7-52